*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த மக்கள் விழிப்புணர்வு: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய காரியாலயத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**எம்.எச்.எப். ஹுஸ்னா[1] & எம்.எம். பாஸில்[2]**
[1&2]அரசியல் விஞ்ஞானத்துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Corespondance: fazrasm@seu.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

*மனித உரிமைகள் என்ற எண்ணக்கருவானது 20ஆம் நூற்றாண்டுகளின் பிற்பகுதியில் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. ஆனால் ஆரம்ப காலங்களில் இருந்தே மனித உரிமைகள் என்பது முக்கிய பேசுபொருளாக இடம்பெற்று வந்துள்ளது. மனித உரிமைகள் என்பது மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் கிடைக்கப் பெற வேண்டியதாகும். எனினும் இன்று மனித உரிமை மீறல்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றமை அவதானிக்கத்தக்கது. இம்மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கையில் மனித உரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதற்காக செயற்பட்டு வரும் முக்கிய அமைப்பாகும். இந்தடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான மக்கள் விழிப்புணர்வு நிலை பற்றியும் ஆணைக்குழு தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் உள்ள சவால்கள் போன்றவற்றை கண்டறிவதை நோக்காகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயம் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பண்பு மற்றும் அளவு ரீதியான ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகள் விபரண முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றிய மக்களின் விழிப்புணர்வு பல்வேறு கோணங்களில் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலமாக மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்கள் மத்தியில் முழுமையான விழிப்புணர்வு காணப்படாமை கண்டறியப்பட்டதுள்ளதுடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆணைக்குழு எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களாக நிதிப் பற்றாக்குறை, பௌதீக மற்றும் ஆளணி பற்றாக்குறை என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.*

**பிரதான சொற்கள்:** *உரிமை மீறல்கள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு*

## 1. அறிமுகம்

*மனித உரிமைகள் என்ற பதம் பல்வேறு புரட்சிகள் மற்றும் பல்வேறு மோதல்களினூடாக விருத்தியடைந்தது. குறிப்பாக முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் பின்னர் மனித உரிமைகள் என்ற பதம் முக்கியம் பெறத் தொடங்கியது. இன்று மனித உரிமை மீறல்கள் உலகளாவிய ரீதியில் முக்கிய பேசுபொருளாக நோக்கப்படுகின்றன. அந்தவகையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்களை விட மனித உரிமை மீறல்கள் தொடர்பான கருத்தாடலே உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது.*

*இலங்கையில் 1996ம் ஆண்டின் 21ம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தீவளாவிய ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக செயற்பட்டு வருகின்ற சுயாதீனமான ஆணைக்குழுவாகும்.*

இந்தடிப்படையில் மனித உரிமைகள் தொடர்பான ஆய்வுகள் அதிகளவில் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான ஆய்வுகள் குறைந்தளவிலே காணப்படுகின்றன. அந்தடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய காரியாலயத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள் ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முதலாம் நிலைத் தரவு, இரண்டாம் நிலைத் தரவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் பண்புசார் மற்றும் அளவுசார் முறையிலமைந்த ஆய்வு முறையியலைத் தழுவி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்பட்டு வருகின்றது. இது பிராந்திய ரீதியாகவும் அலுவலகங்களை உருவாக்கி தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருகின்றது. எனினும் மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நிலை எம்மட்டத்தில் காணப்படுகின்றது என்பதும், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பது கேள்விக்குரியது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மனித உரிமை ஆணைக்குழு எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

## 3. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்வு நிலை தொடர்பாகவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆணைக்குழு முன்னெடுக்கும் விடயங்கள், மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆணைக்குழு எதிர்நோக்கும் சவால்கள் என்பவற்றை அடையாளம் காண்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## 4. ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக்கான தரவுகள், முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களில் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் பண்புசார் மற்றும் அளவுசார் முறையிலமைந்த ஆய்வு முறையியலைத் தழுவி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளதோடு, இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், இணையத்தள குறிப்புக்கள், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கையேடுகள் என்பனவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேர்காணலுக்குட்படுத்தப்பட்டோர் Information Rich Cases களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 15 பேர் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டனர். இவர்களுள் மனித உரிமை ஆணைக் குழுவின் கல்முனை பிராந்திய ஒருங்கிணைப்பாளர், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மூவர், விடய அறிவுடையோர் ஒன்பது பேர் (கல்வியியலாளர் - 05, அரசுசாரா மனித உரிமை நிறுவனம் 04 பேர்), மகளிர் அமைப்பு உத்தியோகத்தர் இருவரும் அடங்குவர்.


தகவல்களை திரட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தானது பின்வரும் அடிப்படையில் பகிரப்பபட்டது. 13 பிரதேச செயலகத்திற்குட்பட்ட மொத்த சனத்தொகையில் 0.023 வீதத்தினை மாதிரியாக கொண்டு 100 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதற்கான மாதிரிகள் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் எளிய எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளன. முடிவுகள் கருத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் அட்டவணை மற்றும் வரைபின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 5. பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்கள் மத்தியில் எவ்வாறான விழிப்புணர்வு நிலை காணப்படுகின்றது என்றும் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் என்பனவும் பகுப்பாய்வு செய்யப்பட்டதிலிருந்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

### *5.1 ஆணைக்குழு தொடர்பான விழிப்புணர்வு*

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பல்வேறு அமைப்புக்கள், சமவாயங்கள் காணப்பட்டு வந்தாலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவானது இலங்கையின் அரசியல் யாப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள முக்கிய ஆணைக்குழுவாகும். அந்தவகையில் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்களின் விழிப்புணர்வு நிலை தொடர்பாக வினவப்பட்ட போது கீழ்வரும் முடிவு பெறப்பட்டது.




**வரைபு 01: ஆணைக்குழு தொடர்பான விழிப்புணர்வு**

இவ்வரைபை நோக்கும் போது 87 வீதமான மக்கள் மனித உரிமை ஆணைக்குழு தொடர்பாக அறிந்து வைத்திருப்பதோடு, 13 வீதமான மக்கள் ஆணைக்குழு தொடர்பான விழிப்புணர்வு அற்றவர்களாக காணப்படுகின்றனர் என்பது புலனாகின்றது. எனினும் அவர்கள் ஆணைக்குழுவின் ஏனைய நடைமுறைகள் பற்றிய அறிவை பெரும்பாலும் கொண்டிருக்கவில்லை எனும் விடயம் நேர்காணலின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக வினவப்பட்ட போது, "இலங்கை வாழ் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவாகும்" என பதிலளித்துள்ளதுடன் "அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும். அவ்வாறாக யாப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமைகளை மக்கள் அனுபவிக்கவும், அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் வழிகாட்டுதல்களை வழங்கும் ஒரு நிறுவனமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு காணப்படுகின்றது என்றும் பொதுவாக மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக அறிந்திருந்தாலும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக குறைந்தளவான அறிவு மட்டமே காணப்படுகின்றது" எனவும் நேர்காணலில் தெரிவிக்கப்பட்டது (தனிப்பட்ட தொடர்பாடல், மார்ச் 24, 2020).

கல்வியிலாளர் ஒருவர் குறிப்பிடுகையில் "இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, மனித உரிமை மீறல்களை வெளிக் கொண்டு வந்து மனித உரிமைகளைப் பாதுகாப்பதோடு,


மனித சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் சேவைகளை வழங்கும் நிறுவனமாகக் காணப்படுகின்றது" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 15, 2020). இன்னுமொரு கல்வியிலாளர் "மக்களுடைய அடிப்படை உரிமைகளாகக் கருதப்படுகின்ற சமூக, பொருளாதார, அரசியல், கல்வி போன்ற உரிமைகள் மறுக்கப்படும் போது அவற்றை ஆணைக்குழுவிடம் முறையிட்டு நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும்" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 15, 2020) எனக் குறிப்பிட்டார்.

மனித உரிமைகளை பேணுவதற்கும் மனித உரிமைகள் மீறப்படும் போது அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உருவாக்கப்பட்டுள்ள நிறுவன அமைப்பே மனித உரிமைகள் ஆணைக்குழுவாகும். மனித உரிமைகள் ஆணைக்குழுவானது சட்ட ரீதியான அமைப்பாகக் காணப்படுவதோடு மனித உரிமைகள் மீறப்படும் போது அவற்றை கண்காணிக்கும் அமைப்பாகவும், அரசுகளுக்கு பரப்புரை செய்யும் அமைப்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவானது இலங்கையில் சட்டரீதியாக மனித உரிமைகள் சம்பந்தமான சட்டங்களை இயற்றுவதற்கும் நிருவாக ரீதியாகக் காணப்படுகின்ற செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாகவும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக அரசுக்கு ஆலோசனை வழங்கல், தேசிய சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நிருவாக நடைமுறை சம்பந்தமாக சர்வதேச ரீதியாக எவ்வாறான தரநிலைமை பேணப்பட வேண்டும் என்பதற்கும் ஆலோசனை வழங்கும் அமைப்பாகக் காணப்படுகின்றது (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 16, 2020).

நேர்காணலின்போது அரசுசாரா அமைப்பின் உறுப்பினர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக கடந்த காலங்களை விட தற்காலத்தில் விழிப்புணர்வு நிலை காணப்படுவதாகவே கருதுகின்றார். ஆனால் அரச உத்தியோகத்தர்களிடம் இது தொடர்பாக போதியளவு விழிப்புணர்வு நிலை காணப்பட்டாலும் சாதாரண பொதுமக்களிடம் குறைவான விழிப்புணர்வு நிலையே காணப் படுவதாக அவர் குறிப்பிடுகின்றார். குறிப்பாக எவ்வாறான முறைப்பாடுகளை செய்யலாம் என்பது தொடர்பாக போதியளவு விழிப்புணர்வு காணப்படுவதில்லை. "மனித உரிமைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் ஜனரஞ்சகப்படுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்க வேண்டும்" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 16, 2020). இங்கு மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்களின் விழிப்புணர்வு நிலை மற்றும் மேம்படுத்தல் நிலை தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

### *5.1.1 ஆணைக்குழு உறுப்பினர்கள் தொடர்பான விழிப்புணர்வு*


ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகள், கட்டமைப்பு நிலை தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படும் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அந்நிறுவனம் தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்வு நிலையை அறிந்து கொள்ள முடியும். அந்தவகையில் இது தொடர்பாக வினவப்பட்ட போது கலவையான பதில்களே கிடைக்கப்பெற்றன. அதில் மக்களுக்கு இது தொடர்பாக போதியளவு விழிப்புணர்வற்ற தன்மை கணிசமான அளவு கண்டறியப்பட்டது.




**வரைபு 02: ஆணைக்குழு உறுப்பினர்கள் தொடர்பான விழிப்புணர்வு**

### *5.1.2 சேவைப் பிரிவுகள் தொடர்பான விழிப்புணர்வு*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவு, கல்வி விஷேட நிகழ்வுகளுக்கான பிரிவு, கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு, நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளை கொண்டுள்ளது. இது தொடர்பாக மக்கள் எந்தளவு விழிப்புணர்வுடன் காணப்படுகின்றனர் என்பதை கீழ்வரும் வரைபு 3 விளக்குகின்றது.




**வரைபு 03: சேவைப் பிரிவுகள் தொடர்பான விழிப்புணர்வு**

இங்கு 87% மக்கள் இது பற்றிய விழிப்புணர்வில்லாமல் இருப்பதோடு 13% மக்களே அது பற்றிய அறிவுடன் காணப்பட்டனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்களின் விழிப்புணர்வு நிலை தொடர்பாக வினவப்பட்ட போது, "இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்கள் போதியளவு விழிப்புணர்வுடன் காணப்படுகின்றனரா? என்பதை இருவகையான கண்ணோட்டங்களில் பார்க்கலாம். அதாவது நகரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் ஆணைக்குழு தொடர்பாக அறிந்திருந்தாலும் கிராமப்புறங்களில் வாழும் மக்களிடம் விழிப்புணர்வு நிலை குறைந்த மட்டத்திலே காணப்படுகின்றது என்றே கூறலாம்" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 10, 2020).


மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்படும் போது அனைத்துத் தரப்பினரதும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினை அணுகி அதன் செயற்பாடுகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

"மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நான்கு பிரதான பகுதிகளைக் கொண்டு காணப் படுகின்றது. அதில் கல்வி மற்றும் விஷேட நிகழ்வுகள் பிரிவினூடாக மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை பல்வேறு தரப்பினரையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தி வருகின்றது. சமூகத்தின் பல்வேறு தரப்பினரினதும் உரிமைகள், சமகால மனித உரிமைகள் நிகழ்வுகள், யுத்தத்திற்குப் பின்னர் காணப்படுகின்ற நிலைமாறுகால நீதி, காணாமல் போனவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் போன்ற தரப்பினரது உரிமை மீறல்கள், அவற்றைப் மீளப் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல்கள் என்பன மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டு வருகின்றது" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 18, 2020) என மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய ஒருங்கிணைப்பாளர் குறிப்பிடு கின்றார்.

### *5.1.3 ஆணைக்குழுவை மக்கள் நாடிச்செல்லல்*

மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்வினைப் பெற்றுக்கொள்ள பொதுவாக மக்கள் நாடும் ஒரு நிறுவனமாக மனித உரிமைகள் ஆணைக்குழு காணப்படுகின்றது. எனினும் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் இந்நிலை குறைவாகவே காணப்படும் நிலை காணப்படுகின்றது. இதனையே

தரவுகளின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட முடிவுகள் விளக்குகின்றது. வரைபு 4 இதனை குறிப்பிடுகின்றது.




**வரைபு 04: ஆணைக்குழுவை மக்கள் நாடிச்செல்லல் தொடர்பான விழிப்புணர்வு**

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிராந்தியத்தில் முறைப்பாடுகளை தெரிவிப்பது தொடர்பான அறிவு நிலை மிகவும் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது. மேலும் முறைப்பாட்டை தெரிவிக்கும் முறை, தொடர்பாக அதிகமானோர் பதிலளிக்காமல் இருந்துள்ளனர். இதன் மூலம் மக்கள் முறைப்பாட்டை தெரிவிக்கும் முறை தொடர்பாக விழிப்புணர்வற்ற நிலை எடுத்துக் காட்டப்படுகின்றது.


இது தொடர்பான நேர்காணலின் போது ஒருவர் கூறியதாவது "மனித உரிமை மீறல்கள் ஏற்படும் போது மக்கள் ஏனைய நிறுவனங்களை நாடிச் செல்வதை விட மனித உரிமைகள் ஆணைக் குழுவை நாடிச் செல்கின்றனர். ஆனால் நிவாரணம் பெற்றுக் கொள்வது தொடர்பாக குறைந்தளவான நம்பிக்கையே கொண்டுள்ளனர்" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 04, 2020) என்ற விடயம் அறியப்பட்டது.

"1948ம் ஆண்டின் மனித உரிமைகள் தொடர்பான பிரகடனத்தை தழுவிய வகையில் 1996ம் ஆண்டின் (21)ம் இலக்க கட்டளைச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்கள் அறிந்து வைத்துள்ளனர் என்றே கூற முடியும். ஏனெனில் மனித உரிமைகள் மீறப்படும் போது மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடுவதன் மூலம் தமது பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கருதுகின்றனர்.

ஆனால் எவ்வாறான பிரச்சினைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய முடியும் என்பதில் போதியளவு தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது. பொலிஸ் நிலையம், இணக்க சபை, சட்ட உதவி ஆணைக்குழு போன்ற நிறுவனங்களால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் கூட மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மக்களால் சமர்ப்பிக்கப்படுகின்றது. ஆனால் அரச உத்தியோகத்தர்கள் தாம் சார்ந்த உரிமை மீறல்களை முறையாக சமர்ப்பிக்கின்றனர்" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 12, 2020) எனும் விடயமும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

### *5.1.4 24 மணி நேர சேவை*


இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தன்னிச்சையான கைதுகள், தடுத்து வைத்தல், தொடர்பாக முறைப்பாடுகளை அறிவிக்க 24 மணி நேர சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது தொடர்பாக நீர் அறிந்துள்ளீரா? என மக்கள் மத்தியில் வினவப்பட்ட போது அதற்கான பதில்களின் விகிதாசாரம் வரைபு 5 இல் காட்டப்பட்டுள்ளது. வரைபின்படி 67 வீதமான மக்கள் குறித்த கேள்விக்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளனர்.




**வரைபு 05: 24 மணி நேர சேவை தொடர்பான விழிப்புணர்வு**

### *5.1.5 சாட்சியங்களை முன்வைக்கும் முறை*

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சாட்சியங்கள் முன்வைக்கப்படும் முறை தொடர்பாக அறிந்திருந்தால்தான் முறையாக சாட்சியங்களை முன்வைக்க முடியும். அந்த வகையில் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் இது தொடர்பாக மக்கள் எவ்வாறான விழிப்புணர்வு நிலையுடன் காணப்படுகின்றனர் என்பது தொடர்பாக வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவை பகுப்பாய்வு செய்த போது கீழ்வருமாறு பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. இங்கு அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் இது சாட்சியம் அளிக்கும் முறை தொடர்பாக போதியளவு விழிப்புணர்வுடன் காணப்படாமை கண்டறியப்பட்டது.





**வரைபு 06: சாட்சியங்களை முன்வைக்கும் முறை தொடர்பான விழிப்புணர்வு**

### *5.1.6 ஆணைக்குழுவின் இணையத்தளப் பயன்பாடு*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அதன் கட்டமைப்பு, பிரிவுகள், முறைப்பாடுகளை தெரிவித்தல், அதன் வெளியீடுகள், ஆணைக்குழுவால் வழங்கப்படும் சேவைகள், ஆணைக்குழுவை தொடர்பு கொள்ளும் முறை போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கி தனது இணையத்தளத்தை உருவாக்கியுள்ளது. அதாவது மக்கள் ஆணைக்குழுவின் சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கும் தமது முறைப்பாடுகளை இலகுவாக


சமர்ப்பிக்கவுமே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பாக மக்கள் எந்தளவு அறிந்து வைத்துள்ளனர் என்பதை கீழ்வரும் வரைபு 7 எடுத்துக் காட்டுகின்றது.




**வரைபு 07: ஆணைக்குழுவின் இணையத்தளப் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வு**

### *5.1.7 கற்கை மற்றும் பயிற்சிகள்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகளை மேம்படுத்தல், மனித உரிமைகள் தொடர்பாக அறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேண்டி காலத்துக் காலம் பல்வேறு கற்கைநெறிகளை நடாத்தி வருகின்றது. இச்செயற்பாடானது தலைமைக்காரியாலயம் மற்றும் பிராந்தியக் காரியாலயங்களினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாடு தொடர்பாக மக்களின் விழிப்புணர்வு நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதை அறிந்து கொள்வதற்காக வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் முடிவுகள் பெறப்பட்டன. அட்டவணை 8 இது தொடர்பாக விளக்குகின்றது.




**வரைபு 08: கற்கை மற்றும் பயிற்சி நெறிகள் தொடர்பான விழிப்புணர்வு**

இங்கு 67% ஆனவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் தொடர்பாக அறிந்திருந்தாலும் அதில் 13% ஆனவர்களே அதில் பங்குபற்றியுள்ளனர். இத் தரவுகளின்படி அதிகமானவர்கள் கற்கைநெறிகளில் பங்குபற்றவில்லை என்பது புலனாகின்றது.

"மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நோக்கும் போது அவை நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளாகவே காணப்படுகின்றன. ஆனால் மனித உரிமைகள் தொடர்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமாயின் ஆணைக்குழுவானது மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனமாக தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 04, 2020) என்ற விடயம் நேர்காணலில் தெரிவிக்கப்பட்டது.

### *5.1.8 ஆணைக்குழுவின் வெளியீடுகள் தொடர்பான விழிப்புணர்வு*

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத் துவதற்காக துண்டுப்பிரசுரங்கள், கைநூல்களை வெளியிடப்படுகின்றது. இவை மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை எந்தளவு மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. இவ்வாறான விழிப்புணர்வு நிலையானது மக்களை சென்றடைந்திருந்தாலும் முறையான விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மனித உரிமை தொடர்பான விழிப்புணர்வு நிலையை மேலும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். இதனை மேலும் உறுதிப்படுத்துவதாக "மனித உரிமைகள் ஆணைக்குழுவானது சாதாரண பொதுமக்கள் மத்தியில் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தன்மையை அதிகரிக்க அதன் செயற்பாட்டுத்தன்மை, வெளிப்படைத்தன்மை என்பன அதிகரிக்கப்படல் வேண்டும்" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 04, 2020).

### *5.2 விஷேட நிகழ்வுகளை நடாத்துதல்*

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மனித உரிமை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத் துவதற்காக வேண்டி மனித உரிமைகள் தினம், சிறுவர் தினம், மகளிர் தினம் போன்ற தினங் களில் விஷேட நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

இங்கு 40 வீதமானவர்கள் விழிப்புணர்வு நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளதோடு 60 வீதமா னர்கள் அதில் பங்குபற்றியிருக்கவில்லை. இவ்வாறாக நிகழ்வுகளில் குறைவானோர் பங்குபற்று வதற்கான காரணங்களாக பின்ரும் காரணங்களைக் குறிப்பிடலாம். "மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் ஒரு குறிப்பிட்ட குழுக்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப் படுகின்றது. அவற்றுக்கான நிதியும் குறைவாகவே ஒதுக்கப்படுகின்றது" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 12, 2020).

மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படும் போது அது தொடர்பான உண்மை களைக் கண்டறிதல், அது சம்பந்தமாக அரசாங்க நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கல், மனித உரிமைகள் தொடர்பாகவும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொள்ளல், தேர்தல்களை கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அண்மைக்காலத்தில் தேசிய மொழிக் கொள்கையை நெறிப்படுத்தல் செயற் பாட்டையும் முன்னெடுத்து வருகின்றது. இனங்களுக்கிடையிலான வெறுப்புப் பிரச்சார செயற் பாடுகளின் போது இது தொடர்பாக அறிக்கைகளை வெளியிட்டதோடு இது தொடர்பாக அரசாங்கத்திற்கு வழிகாட்டல்களையும் வழங்கியது. குறிப்பாக தகவலறியும் சட்டத்தினை அறிமுகப்படுத்தி அதனை அமுல்படுத்துவதற்கும் உறுதுணையாக செயற்பட்டு வந்தது.

காலத்துக் காலம் மனித உரிமைகள் தொடர்பான தெளிவூட்டல்களை அரச உத்தியோகத்தர்களுக்கும் சிவில் சமூகத்தினருக்கும் வழங்கி வருகின்றது. இலங்கையில் அரசியலமைப்புக்கான 19ம் சீர்த்திருத் தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில மாற்றங்கள் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் நியமனம், பொறுப்புக்கூறல் தொடர்பாக மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது போன்ற விடயங்களும் நேர்காணலின்போது தெரவிக்கப்பட்டது (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 16,2020).

### *5.2.1 கண்காணிப்பு நிலை*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவானது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளிவரும் கருத்துக்கள் மற்றும் மனித உரிமைகள் நிலை எவ்வாறு காணப்படுகின்றது தொடர்பாக கண்காணித்து வருகின்றது. இது தொடர்பாக மக்களின் திருப்தி எந்தளவு காணப்படுகின்றது என வினவப்பட்ட போது 93% மக்கள் ஓரளவு திருப்தி என்ற பதிலை அளித்திருந்ததோடு 7% மக்கள் திருப்தியுறுவதாகவும் என்ற பதிலளித்தனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது வெறுக்கத்தக்க பேச்சுக்கள் தொடர்பாக சட்டத்தை இயற்றுவதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது (HRCSL issues, 2019). மேலும் நடைமுறை ரீதியாக ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆணைக்குழு வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றது. உதாரணமாக கொவிட் 19 நோயின் மூலம் இறந்தவர்களின் உடல் தகனம் செய்வது தொடர்பாக முஸ்லிம் சமூகத்தில் திருப்தியற்ற நிலை ஏற்பட்டது. இது தொடர்பாக ஆணைக்குழுவானது, உலக சுகாதார அமைப்பின் ஒழுங்கு முறையை பரிசீலிக்க வேண்டும் எனவும், குறித்த சமூகத்துடன் உரையாடி பொது நலனின் அடிப்படையில் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இறுதி முடிவை எட்டப்படவேண்டும் எனவும் குறிப்பிட் டிருந்தது (HRCSL position, 2020).

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்காக, "மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்படும் விடயங்களை சில சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்கள் செயற்படுத்துவதில் பின்னிற்கும் நிலை காணப்படுகின்றது" (தனிப்பட்ட தொடர் பாடல், ஏப்ரல் 18, 2020). இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் காலதாமதங்கள் ஏற்படலாம்.

### *5.2.2 முறைப்பாடுகளின் எண்ணிக்கை*

கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்திற்கு 2014 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற மனித உரிமைகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 01: கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை**

| வருடம் | கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| **2014** | 239 |
| **2015** | 256 |
| **2016** | 318 |
| **2017** | 269 |

மூலம்: வருடாந்த, காலார்ந்த அறிக்கைகள் 2014-2017

2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் 165 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. அவ்வாறே கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை தீர்ப்பதில் ஆணைக்குழு குறிப்பிட்டளவு முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது என்றே கூறலாம். கல்முனைப் பிராந்தியமானது மாதத்திற்கொரு முறை தனது எல்லைக்குட்பட்ட பொலிஸ் நிலையங்கள், சிறைச்சாலைகள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்களின் நிலைமை தொடர்பாக கண்காணித்து வருகின்றது. அவ்வாறே உள்ளக ஊழியர்களின் திறன் விருத்தி செயற்பாடுகள், சிறப்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றையும் மேற்கொண்டு வருகின்றது (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 18, 2020).

### *5.3 எதிர்கொள்ளும் சவால்கள்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மக்கள் மத்தியில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்வதற்காக சமுதாயத்தில் பல்வேறு மட்டங்களில் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்தி சகல தரப்பினரையும் உள்ளடக்கி மேற்கொள்வதற்கு பல்வேறு காரணிகள் தடையாக உள்ளன. அந்தவகையில் போதிய நிதியின்மை, பௌதீக மற்றும் ஆளணிக் குறைபாடு போன்ற காரணிகள் முக்கிய காணிகளாகும்.

“மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை பல்வேறு மட்டங்களில் மேற்கொண்டு வருகின்றது. அதாவது மனித உரிமைகள் ஆணைக் குழுவானது மனித உரிமை தொடர்பான கருத்தரங்குகளை தனியாக மேற்கொண்டு வருவதோடு, சிவில் அமைப்புக்கள், அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு கருத்தரங்குகளை நடாத்துதல், பல்கலைக்கழகங்களில் செயலமர்வுகளை நடாத்துதல், சிவில் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் போன்றோருக்கும் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி அவர்கள் மூலம் பொது மக்களுக்கு மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வுகளை மேற்கொள்ள முயற்சிக் கின்றது. ஆனால் சாதாரண பொதுமக்கள் மத்தியில் இவ்விழிப்புணர்வு நடவடிக்கைகள் சென்ற டைகின்றதா என்பது கேள்விக்குரியது” (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 12, 2020).

“மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அதன் செயற்பாடுகளை பல்வேறு மட்டங்களில் மேற்கொண்டு வந்தாலும் அதன் செயற்பாடுகள் அல்லது விழிப்புணர்வுகள் சென்றடைய வில்லையா என்பது கேள்விக்குரியது. மனித உரிமைகள் ஆணைக்குழுவானது குறைந்தளவு ஆளணியைக் கொண்டே இயங்கி வருகின்றது. அந்தவகையில் பிராந்தியக் காரியாலங்களில் கூட ஆளணியினர் குறைந்தளவிலே காணப்படுகின்றனர். அதேபோல் அரசு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு எந்தளவு சாதகமான பதில்களை வழங்கி வருகின்றது என்பதோடு மனித உரிமைகள் தொடர்பாக அரச நிறுவனங்கள் எவ்வளவு அக்கறையுடன் செயற்பட்டு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான பிரயத் தனங்களை மேற்கொள்கின்றது போன்ற காரணங்கள் மக்கள் மத்தியில் மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக சென்றடைவதற்கு தடையாக அமைந்துள்ள காரணிகள் எனலாம். ஆனால் தற்காலத்தில் சிவில் சமூகத்தினர், அரச இயந்திரங்களோடு இணைந்து அனைத்துத் தரப்பினருக்கும் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது” (தனிப்பட்ட தொடர்பாடல்,ஏப்ரல் 18, 2020).

கல்முனை பிராந்திய அலுவலகத்தின் கீழுள்ள 13 பிரதேச செயலகங்களின் கீழ் 443,537 மக்கள் வசிக்கின்றனர். மேலும் “கல்முனை பிராந்திய அலுவலகத்தில் நிரந்தர உத்தியோகத்தர்கள் மூன்று பேர் பணியாற்றி வருகின்றனர். அத்தோடு குறித்த பிராந்திய அலுவலகத்திற்கு நிரந்தரமான கட்டிடம் மற்றும் வாகனம் இல்லை. எனவே ஆணைக்குழுவின் பணிகளுக்கு இவை தடைகளாகக் காணப்படுகின்றன. மேலும் கல்முனைப் பிராந்தியக் காரியாலத்தில் முன்னாள் பயிற்சியாளராக செயற்பட்டு வந்த குறித்த நபர், தனக்கு தெரிந்தவரை கல்முனைப் பிராந்தியக் காரியாலயமானது மூன்று இடங்களில் செயற்பட்டு வந்துள்ளதாகக் குறிப்பிட்டார்” (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 12, 2020).

இதனை உறுதிப்படுத்துவதாக இன்னுமொரு நேர்காணலிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. “மிகப் பரந்தளவிலான பிரதேசமாகக் காணப்படுவதோடு பௌதீக மற்றும் ஆளணியினர் குறைபாடு காணப்படும் பட்சத்தில் மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் குறைந்தளவிலே மக்களுக்கு சென் றடையக் கூடியதாக இருக்கும். உப காரியாலயங்களை உருவாக்குவதன் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அனைத்துத் தரப்பினரும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்” (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 10, 2020).

“மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தாபனங்களின் இடம் மாற்றல் காரணமாக மக்கள் அதனை அணுகுவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். மனித உரிமைகள் ஆணைக்குழு தனக்கு

கிடைக்கும் முறைப்பாடுகளை கையாள்கின்றது. பொதுமக்களுக்கிடையில் ஏற்படுகின்ற மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளின் போது அது தொடர்பாக தலையிட்டு அதற்குரிய பரிகாரங்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனினும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களிற்கும் அதன் செயற்பாடுகளுக்குமிடையில் ஓர் இடை வெளி காணப்பட்டு வருகின்றது" (தனிப்பட்ட தொடர்பாடல்,ஏப்ரல் 16, 2020).

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு போதியளவு அதிகாரங்கள் காணப்படாமையானது அதன் செயற்றிறனுக்கு தடையாக உள்ளது. இதனையே நேர்காணலில் "மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு தனியான அதிகாரங்கள் வழங்கப்பட்டு முடிவுகள் கட்டளையாக வழங்குவதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால் தற்போது ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அதன் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளது" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 16, 2020). மக்களினால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறைவான காலப்பகுதியில் தீர்த்து வைக்கப்படவும், ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்படும் விடயங்களை உரிய தரப்பினர் அமுல்படுத்தும் வகையில் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தமது செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக பிராந்திய ரீதியில் காரியாலங்களை அமைத்திருந்தாலும் அதன் செயற்பாடுகள் அசமந்தப் போக்குடனே செயற்படுகின்றது என்றே கூற முடியும். இதனையே நேர்காணலில் போது ஒருவர் குறிப்பிட்டுள்ளார். "கற்றவர்கள் மத்தியில் கூட மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக போதியளவு விழிப்புணர்வு காணப்படுவதில்லை. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டால்தான் மக்கள் அவர்களின் மனித உரிமைகள் மீறப்படும் போது முறையிடுவர். அண்மைக்காலமாக பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு நிலையை ஏற்படுத்துவதற்காக பல்கலைக் கழக நிருவாகத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. ஆனால் சாதாரண பொதுமக்களின் இது தொடர்பான அறிவு தாழ்ந்த மட்டத்திலே காணப்படுகின்றது" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 15, 2020).

"இலங்கையில் 25 மாவட்டங்கள் காணப்பட்டு வந்தாலும் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலங்கள் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிக் காணப்படுவதில்லை. இதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமற்றதாகும். அதேவேளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு களானது குறிப்பிட்ட குழுவினரை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. தெளிவூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்றாலும் மக்களின் சமூகமயாக்கல் தன்மை உரிமைகள் தொடர்பான தெளி வூட்டல்களை பெறுவதற்கு உறுதுணையாக அமைவதில்லை" (தனிப்பட்ட தொடர்பாடல், மார்ச் 24, 2020).

"மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிகளுள் ஒன்றாக மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஊட்டுதலும் ஒன்றாகும். மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மக்கள் மத்தியில் இது தொடர்பாக அறிவை ஊட்டுவதற்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத் தாலும் கிராமப் பிரதேசங்களுக்கும் அதன் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகள் என்றால் என்ன என்பதற்கான விழிப் புணர்வை ஊட்டுவதோடு மனித உரிமைகள் மீறப்படும் போது எவ்வாறான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அறிவையும் மக்களுக்கு ஊட்டும் பணியை ஆற்றுகின்றது. ஆனால் அதன் பணிகள் குறிப்பிட்ட பிரதேசங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டே காணப்படுகின்றது" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 10, 2020).

"இலங்கையில் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அல்லது உரிமைகள் மீறப்படும் போது அவற்றை முறையிடுவதற்கு உயர்நீதிமன்றம், ஓம்புட்ஸ்மன், மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றன காணப்பட்டு வந்தபோதும் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்கள் தற்போது அறிந்திருப்பதோடு இலகுவாக முறைப்பாடுகளையும் அளிக்கக் கூடியதாக உள்ளது. இலகுவாக மக்கள் அணுகக் கூடியதாகக் காணப்படுகின்றமை, அரச உத்தியோகத்

தர்களால் உரிமை மீறப்படும் போது அது தொடர்பாக ஆலோசனைகளை பெறக் கூடியதாக உள்ளமை, அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது மீளப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளமை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் காரணமாக மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை பெறும் வீதம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது" (தனிப்பட்ட தொடர்பாடல், ஏப்ரல் 12, 2020).

இந்தவகையில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிதி, அதிகாரம், ஆளணி, பௌதீக வளம் என்பவற்றின் பற்றாக்குறையும் பிராந்தியக் காரியாலயங்கள் குறைவாகக் காணப் படல், மக்களின் விழிப்புணர்வு குறைவாக உள்ளமை போன்ற மேல்வரும் காரணிகள் தடையாக காணப்படுவது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## 6. முடிவுரை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் அடிப்படையில், ஆணைக்குழு தொடர்பாக மக்கள் மத்தியில் எவ்வாறான விழிப்புணர்வு நிலை காணப்படுகின்றது என்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்தவகையில் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மக்கள் குறிப்பிட்டளவு விழிப்புணர்வுடனே காணப்படுகின்றனர். அந்தவகையில் ஆணைக்குழுவை அறிநிதிருத்தல், அதன் 24மணி நேர சேவை பற்றி அறிந்திருத்தல், இணையம், கற்கை நெறிகள் என்பன பற்றிய அறிவு, ஆணைக்குழுவின் கையேடுகளின் மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளல் என்பனவற்றில் அதிகமான விழிப்புணர்வு காணப்படுகின்றது. ஆனாலும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பிரிவுகள், அதில் முறைப்பாடுகளை செய்தல், சாட்சியங்களை முன்வைத்தல், பிராந்தியக் காரியாலயம் என்பனவற்றில் குறைவான விழிப்புணர்வே காணப்படுகின்றது. ஆணைக் குழுவால் வழங்கப்படும் கற்கைநெறிகள் பற்றிய அறிவு காணப்பட்ட போதும் அதில் குறைவான மக்களே பங்குபற்றியுள்ளனர். ஆணைக்குழுவால் நடாத்தப்படம் விஷேட நிகழ்வுகள் பற்றிய அறிவும் மக்களிடம் குறைவாக உள்ளது. ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாகக் காணப்படும் பிரதான காரணிகள் இணங்காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாகவும் அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் போதியளவு விழிப்புணர்வு நிலை காணப்பட்டால் தான் அதன் செயற்பாடுகளை மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது தெளிவாகின்றது.

## உசாத்துணைகள்

*HRCSL issues guidelines on application of hate speech law.* (2019, September 24). Reterieved from http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=211134

*HRCSL position on regulation on disposal of bodiesof covid-19 victims.* (2020, April 16). Reterieved from http://www.hrcsl.lk/hrcsl-position-on-regulation-on-disposal-of-bodies-of-covid-19-victims/

Human Rights Commission of SriLanka. (2015). *2015 Annual report*.

Human Rights Commission of SriLanka. (2016). 2016 Annual report.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. (2013). *2013 ஆண்டறிக்கை.*

*மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் பொறிமுறைகள்.* (2016). இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

மேனகா, ஹே., & கபிலன், வி.க. (2015). *மனித உரிமைத் தோற்றுவாய்களும் அதன் விருத்தியும்.* இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.